
# அன்பரின் ஊழியம்

ANBARIN OOZHIYAM

மலர் : 11 இதழ் : 03 மார்ச் 2025 தனிபிரதி - ரூ. 20/- ஆண்டு சந்தா- ரூ. 200/-
Vol : 11 Issue No : 03 March 2025 Single Copy - 20/- Annual Subscription - Rs. 200/-



# அன்பரின் ஊழிய பங்காளர் வாழ்வில் கர்த்தர் செய்த அற்புதங்கள்....



நாங்கள் குடும்பமாக ஆந்திரா மற்றும் தெலுங்கானாவில் ஊழியம் செய்து வருகிறோம். கடந்த 10 ஆண்டுகளாக நாங்கள் அன்பரின் ஊழிய பங்காளராக இருக்கிறோம். **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களுடைய ஜெபத்தினால் கர்த்தர் எங்கள் குடும்பத்திற்கு அற்புதத்தின் மேல் அற்புதம் செய்து வருகிறார்.

**மகனுடைய ஆட்டிஸம் வியாதி குணமானது!**

எங்களுக்கு ஒரே ஒரு மகன் இருக்கிறான். அவன் பெயர் சாலமோன் டேனியல். அவனுக்கு ஆட்டிஸம் வியாதி இருந்தது. அதனால் அதிக கஷ்டங்களை அனுபவித்தோம். **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் எங்களுடைய ஆவிக்குரிய தகப்பனாக இருந்து வருகிறார். அவருடைய கூட்டங்களில் நாங்கள் தவறாமல் கலந்துக் கொள்வோம். எங்கள் மகனுக்காக ஐயா அவர்கள் பாரத்துடன் ஜெபித்து அனுப்புவார்கள். அவர்களுடைய ஊக்கமான ஜெபத்தினால் கர்த்தர் எங்கள் மகனுக்கு இரங்கினார். **மகனுக்கு இருந்த ஆட்டிஸம் வியாதி நீங்கி இப்பொழுது அவன் செயல்பாடுகளில் நல்ல முன்னேற்றம் தெரிகிறது. நன்றாக பேசுகிறான், பாடுகிறான். எங்களோடு இணைந்து ஊழியத்தில் உதவியாக இருக்கிறான்.**

**பொய் வழக்கிலிருந்து விடுதலை!**

என் மனைவி அரசு பள்ளியில் தலைமையாசிரியராக பணியாற்றி வருகிறார்கள். பணியில் உள்ள ஒரு சிலர் பொறாமையால் **என் மனைவி மீது சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு போட்டனர். அந்த வழக்கு தள்ளுபடி ஆகும்படி கர்த்தர் அற்புதம் செய்தார்.**

**வீடு, சொத்துக்கள் கிடைத்தது!**

சமீபாத்தில் நாங்கள் புது வீடு கட்டுவதற்கு கர்த்தர் உதவி செய்தார். எனக்கு அம்மா வழி சொத்துக்கள், அப்பா வழி சொத்துக்கள் கிடைப்பதற்கும் கர்த்தர் தயை செய்தார்.



**பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் கிடைத்தது!**

பரிசுத்த ஆவியானவரின் வரங்களால் நிரப்பப்பட்டு கர்த்தர் எங்களை ஆந்திரா மற்றும் தெலுங்கானாவில் பயன்படுத்தி வருகிறார். எங்களை கைவிடாமல் அற்புதமாய் நடத்தி வருகிற கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறோம்.

**Dr.ஆனந்தஸ்திரா, Mrs.மார்கிரேட் ஸ்திரா** மற்றும் குடும்பத்தினர் அனைவருக்கும் எங்களுடைய நன்றியைத் தெரிவிக்கிறோம். ஐயா, அம்மா இருவருக்கும் கர்த்தர் நீடிய ஆயுளை தந்து உலகம் முழுவதும் கொண்டு செல்லும்படி ஜெபிக்கிறோம்.

**திரு. திலீப் குமார், ரெங்காரெட்டி மாவட்டம்.**

dranandastira@mojindia.org

# அன்பரின் ஊழியம்

♦ மலர் : 11 ♦ மார்ச் 2025 ♦ இதழ் 3


## உங்கள் ஆசிரியரிடமிருந்து...



கிறிஸ்துவுக்குள் பிரிய மானவர்களே,

சிலுவையில் வெற்றி சிறந்த நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்!

இந்த மாத பத்திரிக்கையின் வாயிலாக உங்களை சந்திப்பதில் அதிக மகிழ்ச்சியடைகிறேன். கிறிஸ்துவின் சிலுவை பாடுகளை நினைக்கின்ற இந்த நாட்களில் சிலுவையின் மேன்மையை நினைவுகூர்ந்து கர்த்தரை அதிகமாய் ஸ்தோத்தரியுங்கள்.

சிலுவை தியாகமே நம்முடைய மீட்பு, நம்முடைய இரட்சிப்பு, நம்முடைய மேன்மை, நம்முடைய வாழ்வின் ஆதாரம். கிறிஸ்து சிலுவையில் மரித்திராவிட்டால் நாம் அனைவரும் பரிதபிக்கப்பட்டவர்களாய், நம்பிக்கையில்லாதவர்களாய் இருப்போம். எனவே தொடர்ந்து இயேசுவின் சிலுவை அன்பை மறவாமல் அவருக்கு நன்றி செலுத்திக் கொண்டேயிருங்கள். அப்பொழுது உங்கள் கஷ்டங்களிலிருந்து நீங்கள் விடுதலையாவீர்கள்.

**அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். (எபி.12:2)**

**நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக, அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன். (கலா.6:14)**

இந்த மாதத்தில் எங்கள் அப்பாவின் பிறந்த நாளை சிறப்பிக்கின்றோம். உங்களுடைய ஜெபத்தில் அப்பாவின் சுகத்திற்காக ஜெபியுங்கள்.


ஆசிரியர் / வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா

சந்தா விபரம்

இந்தியா : ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-
வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/-

காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை
ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: +91 9488845627
Telugu : +91 99445 36343, Malayalam: +91 94889 32937

e-mail:info@mojindia.org Website: www.ministryofjesus.in

முகவரி : அன்பரின் ஊழியம், 40, S.P.K தெரு, உறையூர் திருச்சி – 620 003.
Address : Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003

பெலவீனங்கள் மத்தியில் கர்த்தர் தாமே அவர்களை பெலப்படுத்தி நடத்தும்படி ஜெபியுங்கள்.

இந்த மாதத்தில் தேர்வுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிற உங்கள் பிள்ளைகள், பேரப் பிள்ளைகளுக்காக நாங்கள் விசேஷமாக ஜெபிக்கிறோம். ஜெபம் தேவைப்படுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய செல்போன் எண்: **95975 55066**

நம்முடைய நேரலை (Live) நிகழ்ச்சிகளை தவறாமல் பாருங்கள். அந்த நிகழ்ச்சிகள் உங்களுக்கு எப்படி பயனுள்ளதாக இருந்தது என்பதை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.


பிப்ரவரி மாதம் நடைபெற்ற கூட்டங்களை கர்த்தர் ஆசீர்வதித்தார். மார்ச் மாதத்தில் மார்த்தாண்டம், கன்னியாகுமரி, சென்னை மற்றும் திருச்சியில் நடைபெறயிருக்கிற கூட்டங்களுக்காக ஜெபியுங்கள். உங்கள் பகுதியில் நடைபெறுகிற நம் கூட்டங்களில் கலந்துக் கொள்ளுங்கள்.

ஊழியத்தின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். எங்கள் அனைவருக்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள். கர்த்தர் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதித்து காப்பாராக!


கிறிஸ்துவின் பணியில்

**Dr. ஜேன் ஜாஷ்வா**

jane@mojindia.org


**Malayalam Whats App No. +91 94889 32937**



# முடிந்தது

தேவ செய்தி : ஜோனத்தன் மோசஸ் ராஜ் ஸ்திரா

கிறிஸ்துவுக்குள் எனக்கன்பான சகோதர, சகோதரிகளே!

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்! இந்த மாத செய்தியின் வாயிலாக கர்த்தர் தாமே உங்களோடு பேசுவாராக! தேவ சமாதானம், பாதுகாப்பு உங்களுடன் எப்பொழுதும் இருப்பதாக!

அன்பானவர்களே! இந்த நாட்களில் நாம் அதிகமாக உபயோகப்படுத்தும் வார்த்தை **முடிந்தது** என்பதாகும். பள்ளிக்குச் செல்கின்ற மாணவர் களிலிருந்து, உயர்ந்த நிலையில் இருக்கின்ற மனிதர்கள் வரை அனைவரும் அதிகமாக உச்சரிக்க விரும்புகிற ஒரு வார்த்தை **முடிந்தது** ஆகும். “இந்த வேலையை நான் அருமையாக முடித்துவிட்டேன்” “இந்த Project-ஐ முடித்துவிட்டேன்.” “இந்த Problem இத்துடன் முடிந்தது.” “இந்த Achievement-ஐ சிறப்பாக முடித்து விட்டேன்” என்ற வார்த்தையை தான் சொல்ல விரும்புவார்கள்.

நம்முடைய குடும்பங்களில் சில காரியங்களை விரைவாக முடிக்க வேண்டும் என நாம் ஆசைப்படு வோம். அதற்கான முயற்சிகள் எடுப்போம். உதாரண மாக இந்த வருடத்தில் நல்ல வீடு ஒன்று கட்டி முடிக்க வேண்டும், சொந்தமாக நல்ல ஒரு கார் வாங்க வேண்டும், பிள்ளைகளின் திருமண காரியங்களை விரைவில் முடிக்க வேண்டும் என ஆசைப்படுவது இயல்பானவையே! மாணவர்களாக இருந்தால் தேர்வு எப்பொழுது முடியும், கடன் பிரச்சனை உள்ளவர்கள் இந்த கடன் பாரம் எனக்கு எப்பொழுது முடியும்? என்ற ஒரு கேள்வியுடன் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். சில நேரங்களில் மனிதரால் வருகிற இடையூறுகள் நிமித்தம் நாம் ஆரம்பித்த காரியங்களை முடிக்க முடியாமல் போய்விடுகிறோம். இவ்வாறு நம்மால் முடிக்க முடியாத காரியங்கள் பல உண்டு.

ஆனால் நாம் பிறப்பதற்கு முன்பே நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து சிலுவையில் பல காரியங்களை நமக்காக முடித்தார், இனிமேலும் முடிப்பார். **இயேசு காடியை வாங்கினபின்பு, முடிந்தது என்று சொல்லி, தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார். யோவான் 19:30** இயேசு சிலுவையில் கடைசியாக முடிந்தது என்று கூறினார். **அவர் முடித்த காரியங்கள் எவை? இனி மேல் அவர் முடிக்கப்போகிற காரியங்கள் எவை என்பதை இந்த செய்தியில் காண்போம்.**

**யோவான் 19-ம்** அதிகாரம் முழுவதுமே இயேசு சிலுவையில் அடைந்த பாடுகளை குறித்தே எழுதப்பட்டுள்ளது. **யோவான் 18-ம்** அதிகாரம் இயேசு கெத்செமனே தோட்டத்தில் ஜெபம் செய்ததிலிருந்து ஆரம்பம் ஆகின்றது. மத்தேயு, மாற்கு லூக்கா ஆகிய சுவிசேஷ புத்தகங்களில் இயேசுவின் பாடுகளைக் குறித்து எழுதியிருந்தாலும் யோவான் புத்தகத்தில் சிலுவையின் பாடுகளை நீங்கள் தியானிக்கும்பொழுது மிக எளிதாக புரிந்துக்கொள்ள முடியும். அத்துடன் பல ஆழமான அர்த்தங்களை அது கொண்டதாக இருக்கிறது.

கர்த்தர் இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தப்பொழுது கூறின ஆறாவது வார்த்தை தான் **“முடிந்தது” (It is finished)** என்ற இந்த வார்த்தை. பிதாவாகிய தேவன் தாமே இயேசுவுக்கு சொன்னதை குமாரனாகிய தேவன் செய்து முடித்தார். **...நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன். (யோவான் 17:4)**

இயேசு காடியை வாங்கின பின்பு **முடிந்தது** என்று சொல்லி தலையை சாய்த்து ஆவியை ஒப்புக்கொடுத்தார் என்று எழுதப்பட்டுள்ளது. முடிந்தது என்கிற வார்த்தையை உலகத்தை படைத்தவர், சிலுவையில் எதற்காக கூற வேண்டும்? இதில் மூன்று காரியங்களை சுருக்கமாக விளக்க ஆசைப்படுகின் றேன்.

## I. இயேசு சிலுவையில் முடித்தது

### a. பாவத்திற்கு முடிவு உண்டாக்கினார்!

**சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்பட வேண்டும் - யோவான் 3:14,15**

நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து சிலுவையில் மரிப்பதற்கான நோக்கம் என்ன? நம்முடைய பாவங்கள், அக்கிரமங்கள் மற்றும் சாபங்களினால் வருகிற நித்திய ஆக்கினையிலிருந்து நம்மை விடுவித்து, நித்திய இரட்சிப்பை கொடுப்பதற்காகவே இயேசு மரித்தார். யோவான் 3-ம் அதிகாரத்தில் இயேசுவே அதைக் குறித்து சாட்சி கொடுக்கிறார். **தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். (யோவான் 3:16-17)**

இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற எந்த ஒரு நபரும் கெட்டுப் போகக்கூடாது, எந்த ஒரு நபரும் வாழ்வை இழந்துவிடக்கூடாது என்றும் அவர்கள் நித்திய ஜீவனை அடையவுமே தேவன் விரும்புகிறார். அதற்காகவே மனுஷகுமாரனும் சிலுவையில் உயர்த்தப்பட வேண்டும் என்பது தேவனின் சித்தமாக இருந்தது. சர்ப்பமானது மோசேயினால் உயர்த்தப் பட்டது போல, நாம் வாழ்வு பெற மனுஷகுமாரன் சிலுவையில் உயர்த்தப்பட்டார். மனிதர்கள் எல்லாரும் பாவம் செய்துக்கொண்டே இருக்கிறார்கள், அதனால் விடுதலை இல்லாமல், இரட்சிப்பு இல்லாமல் நரகத்திற்கு சென்றுக்கொண்டே இருந்தால் நிலைமை என்ன ஆகும் என்பதை சற்று யோசித்துப்பாருங்கள். மனிதனுக்கு சமாதானம் உண்டாகும்படியாக நம்முடைய பாவத்தின் வேதனை அவர் மேல் சுமத்தப்பட்டது. **நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. (ஏசாயா 53:5)** நாம் நித்திய அழிவை நோக்கி செல்லாதபடி இயேசு பாவத்திற்கு ஒரு முடிவு கட்டினார்.

பாவங்களின் அகோரத்தினால் எதிர்காலமே கேள்விக்குறியாகி நிற்கிற பிள்ளைகள் இன்றைக்கு ஏராளம் உண்டு. இவர்கள் எல்லாம் அழிந்துப்போய் விடக்கூடாது என்பதற்காக **"நான் மரிக்க வேண்டும்"** என்று இயேசு கூறுகின்றார். இயேசு தாமே நம்முடைய பாவங்களை சிலுவையின் மேல் சுமந்தார். **நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார். (1பேதுரு 2:24)** ஆகவே, இன்று பாவத்திலிருந்து விடுதலை இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறீர்களா? இயேசுவை விசுவாசியுங்கள். அவருடைய இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, உங்களை கழுவி சுத்தமாக்கும்.

### b. சாபத்திற்கு முடிவு உண்டாக்கினார்.

- **மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப் பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார். கலா.3:13**

ரோமர்கள் மற்றும் யூதர்களுடைய கலாச்சாரத்தின்படி சிலுவையில் அறைய ஒருவனை ஒப்புக்கொடுத்து விட்டார்கள் என்றால் அவன் சபிக்கப்பட்டவன் என்று அர்த்தம். அதன்படி கிறிஸ்து நமக்காக சாபமானார். நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டார். நாம் அழிந்து போய்விடக்கூடாது என்பதற்காக அவர் மரித்தார். **சாபத்திலிருந்து நமக்கு ஒரு முடிவை கட்டளையிட்டார். அவரே நமக்காக சாபமானார்! சாபங்களிலிருந்து நம்மை விடுதலையாக்கினார்.**

காலம் காலமாய் தொன்றுதொட்டு வருகிற பரம்பரை சாபங்களினால் இன்றைக்கு நீங்கள் கண்ணீரில் வாழ்ந்துக்கொண்டிருக்கின்றீர்களா? கலங்கவேண்டாம். **உங்களுக்கு விரோதமாக காரணமில்லாமல் வந்த சாபங்களையும் இயேசுகிறிஸ்து சிலுவையில் முறியடித்தார்.**

ஆம்! மனித இனத்தின்மீது வந்த அனைத்து சாபங்களுக்கும் இயேசு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார்.

### c. விரோதமாய் இருக்கிற அதிகாரங்களுக்கு முடிவு உண்டாக்கினார்.

- **நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து,**
- **துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார். (கொலோ.2:14-15)**

துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் உரிந்து கொண்டு வெளியரங்கமான கோலமாக்கி அவைகளின் மேல் இயேசு வெற்றி சிறந்தார். சில சமயங்களில் **உங்கள் கண்களுக்கு தெரியாமல் மறைவில் போடுகிற திட்டங்கள், உங்களை வீழ்த்துவதற்காக செய்கிற யோசனைகள் (Passive-ஆக) உங்களுக்கு விரோதமான காரியங்கள் அனைத்தையும் தேவன் குலைத்துப்போடுவார்.** அது மாத்திரம் அல்ல, உங்கள் கண்களுக்கு தெரிந்தே செயல்படுகிற திட்டங்கள், யோசனைகள், அதிகாரங்களையும் (Active-ஆக) கர்த்தர் ஒன்றுமில்லாமல் குலைத்துப் போடுவார்.

நமக்கு எதிரிடையாகவும், நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தை இயேசு முறித்து இருக்கிறார். நமக்கு விரோதமாக எழும்புகிற துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் இயேசு முறித்து விட்டார். ஒரு சிலர் இவ்வாறு கூறுவதுண்டு, **"அவனை ஒன்றுமே செய்ய முடியவில்லை, அவன் மிகப்பெரிய அந்தஸ்தில் உள்ள மனிதன்,"** என்பார்கள். அப்படிப்பட்டவர்கள் உங்களுக்கு எதிராய் இருந்தாலும் இன்றைக்கு ஆண்டவர் அவர்களையும், **வெளியரங்கமான கோலமாக்கி அவைகளின் மேல் சிலுவையில் வெற்றி சிறந்தேன்** என்று கூறுகிறார்.

அன்பானவர்களே, இன்றைக்கு உங்களுக்கு விரோதமாக போடப்பட்டிருக்கிற கையெழுத்தை நினைத்து கலங்காதீர்கள்! இயேசுவின் இரத்தம் அதை குலைத்துப்போடும், ஒன்றுமில்லாமல் மாற்றிப்போடும்.

**இயேசு மரித்தபொழுது அவர் கல்லறையிலிருந்து வெளியே வந்துவிடக்கூடாது என்று அந்த கல்லறைக்கு முத்திரை வைக்கப்பட்டது. ஆனால் தேவனுடைய சிலுவையின் இரத்தத்தால் அந்த அதிகாரத்தின் வல்லமை குலைக்கப்பட்டது. ஆம். நமக்கு விரோதமாக இருக்கிற சகல துரைத்தனங்களையும், அனைத்து அதிகாரங்களையும், கூட்டு சதிகளையும் தேவன் சிலுவையில் முடித்தார். எனவே தான் வசனம் சொல்லுகிறது. பிசாசின் பிடியிலிருந்தும், உலகப்பிரகாரமாக இருக்கிற மனிதர்கள் கையிலிருந்தும் உங்களை விடுவிப்பது ஆண்டவருக்கு இலேசான காரியம்.**

பிரியமானவர்களே, **இன்றைக்கு உங்கள் வாழ்க்கையில் உங்களுக்கு எதிரான திட்டங்களை ஆலோசனைகளை இயேசுவின் இரத்தம் குலைத்துப்போடும், அதற்கான முடிவு உங்களுக்கு கிடைக்கும்.**

### d. வியாதிகளுக்கு முடிவு உண்டாக்கினார்.

- **அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். ஏசாயா 53:5**

இந்நாட்களில் வியாதிகள் பல விதங்களில் விஸ்வரூபம் எடுத்துக்கொண்டுதான் இருக்கிறது. வியாதிக்கான மருந்துகள் கண்டுபிடித்தாலும் பூரண சுகம், விடுதலை இல்லாமல் மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றனர். அவர்களை சொஸ்தமாக்க இயேசு சிலுவையிலே நோய்களை சுமந்தார். **அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார். மத்.8:17** நம்முடைய வியாதிகளை சிலுவையிலே முடித்தார். கொடூரமான வியாதிகளிலிருந்து இயேசுவின் இரத்தம் ஒரு விடுதலையை கொடுக்கிறது. இயேசுவின் **தழும்புகளால் நாம் சுகமாவதன் வழியாக நம்முடைய வியாதிகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டார்.** ஆம்! நம்முடைய வியாதிகளை வேரோடு அவருடைய இரத்தம் விலக்கியது.

## II. இரகசிய வருகையில் – முடிய போவது

இயேசுவின் இரகசிய வருகை! இதை ஒரு பொருட்டாகவே யாரும் எண்ணுவதில்லை. இரகசிய வருகையென்றால் என்னவென்றே பலருக்கும் தெரிவதில்லை. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன் இரகசிய வருகை நடைபெறும். இரகசிய வருகையின் போது நீங்கள் உயிரோடிருந்தால் அப்பொழுது என்ன முடியவடையும் என்று எண்ணலாம், இரகசிய வருகைக்கு முன் நீங்கள் மரித்து விட்டால் அப்பொழுது என்ன முடியவடையும் என்று எண்ணலாம். ஆகையால் இவை எல்லாம் எவற்றை முடிக்கப் போகிறது என்பதை தொடர்ந்து பார்ப்போம்.

கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என வேதம் சொல்கிறது. மரணம் உலகப் பிரகாரமாக நமக்கு கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால் இயேசுகிறிஸ்து தம் சிலுவையின் மூலமாக அதையும் நமக்கு நன்மையாகத்தான் முடித்து வைத்திருக்கிறார். மரணம் என்பது தேவனுக்குள் வாழ்கிறவர்களுக்கு தேவனுடைய அன்பினால் முழ்கடிக்கப்பட்டவர்களுக்கு நிச்சயம் அது நல்ல காரியம் தான். மரணத்தையும் தேவன் நமக்காக நன்மையாக மாற்றுகிறார். ஏனென்றால், மரணத்திற்கு பின்பு வெளி.7:16-ன்படி **நமக்கு பசியில்லை, தாகமில்லை, எந்த ஒரு தொல்லையும் இல்லை.** கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்களாக மாறுவது எத்துணை பாக்கியமான காரியம்!

**அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள், இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்.**

**சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார், தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார் என்றான்.** வெளி.7:14,17-ன் படியே இரகசிய வருகையின்போது நம் பாடுகள், போராட்டங்கள், வேதனைகள், கவலைகள், கஷ்டங்கள், கண்ணீர், பயங்கள், நிறைவேறாத ஆசைகள் அனைத்திற்கும் முடிவு உண்டாகிறது. இரகசிய வருகையில் நீங்கள் எடுத்துக்கொள்ளப்படும் பொழுது அங்கு உலகப்பிரகாரமான எல்லா செயல்பாடுகளுக்கும், போராட்டம் நிறைந்த வாழ்க்கைக்கும் தேவன் தாமே முற்றுப்புள்ளி வைக்கிறார்.

- **மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்.**
- **வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார் அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒருமுனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்**
**- மத்தேயு 24 : 27, 31**

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனை மட்டும் நான்கு திசைகளிலிருந்தும் கூட்டி சேர்க்கப்படுவார்கள். நீங்கள் தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்டு, உண்மையாகவே தேவனை நேசித்து பரிசுத்தமாய் வாழ்ந்தீர்கள் என்றால் அப்பொழுது நீங்களும் எடுத்துக்கொள்ளப்படுவீர்கள்.

**நாம் எதிர்நோக்கி இருக்கிற இரகசிய வருகை அல்லது மரணம் நம்முடைய பாடுகள், சோர்வுகள், உலகப்பிரகாரமான எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு தருவதாக இருக்கிறது.**

## III. இரண்டாம் வருகையில் – முடிய போவது

- **சகல ஜனங்களும் ஜாதியாரும் பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரிகமும் கொடுக்கப்பட்டது, அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்.** தானி.7:14

இரண்டாம் வருகையைக் குறித்து பலர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவையெல்லாம் உண்மை யானது. கர்த்தருடைய இரண்டாம் வருகையில் உலகப்பிரகாரமான எல்லா ராஜ்யங்களுக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படும். இயேசுவிற்கு கர்த்தத்துவமும், மகிமையும், ராஜரீகமும் கொடுக்கப் பட்டுள்ளது. அவருடைய கர்த்தத்துவமும், ராஜ்யமும் என்றென்றும் அழியாத நீங்காத கர்த்தத்துவம் ஆகும். இயேசுவின் ராஜ்யம் ஒன்றே அனைத்தும் முடிந்தது என்ற எச்சரிக்கையைத் தருகிறது. நாம் வாழுகிற இந்த **உலகத்தில் எத்தனை ராஜ்யங்கள் நேர்மை யற்றதாக இருக்கிறது. பல கொடுமைகள், கண்களால் பார்க்க முடியாத, காதுகளால் கேட்க முடியாத பல காரியங்கள் இன்று வரை நடந்துக்கொண்டுதான் இருக்கின்றன். இவை எல்லாவற்றிற்கும் இயேசுவின் வருகையின் போது ஒரு முடிவு கொண்டு வரப்படும். அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவம். அவருடைய ராஜ்யம் அழிவில்லாத ராஜ்யம். தேவனாலேயன்றி ஒரு அதிகாரமும் இல்லை.**

- **அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்** **– மத்தேயு 25 : 46**
- **கையோடே கைகோத்தாலும், துஷ்டன் தண்டனைக்குத் தப்பான், நீதிமான்களுடைய சந்ததியோ விடுவிக்கப்படும்** **– நீதி. 11 : 21**

துன்மார்க்கர் நித்திய ஆக்கினையை அடைவார்கள், துஷ்டன் ஒரு போதும் தண்டனைக்கு தப்பான், நீதிமான்களோ நித்திய ஜீவனை பெறுவார்கள் என்று துன்மாக்கருக்கும், நீதிமான்களுக்கும் கிடைக்கும் பலனைக் குறித்து வேத வசனங்கள் இங்கு தெளிவாக கூறுகிறது. இன்றைக்கு துன்மார்க்கமாய் வாழுகின்ற பலர் நன்றாக தான் இருக்கிறார்கள் என்று நீங்கள் யோசிக்கலாம். கர்த்தருடைய பார்வைக்கு அவர்களுடைய வாழ்க்கை முடிந்தது. அவர்களை நினைத்து நீங்கள் கவலைப்படாதீர்கள்! துஷ்டன் ஒருபோதும் தண்டனைக்கு தப்பான். எவ்வளவு மாஸ்டர் பிளான் போட்டு தப்பிக்க நினைத்தாலும் தேவனுடைய பார்வைக்கும், தேவனுடைய தண்டனைக்கும் துன்மார்க்கரால் ஒரு போதும் தப்ப முடியாது.

**உலகத்தின் ராஜ்ய பாரங்கள், நேர்மை யில்லாத அதிகாரங்கள் அனைத்திற்கும் அன்றைக்கு முடிவு உண்டாக்கப்படும். இவை எல்லாவற்றிற்கும் தேவனால் மட்டுமே முடிவு கொண்டு வரப்படும்.**

## IV. முடிப்பதற்கு அதிகாரம் பெற்றவர்

**அதிகாரத்தில் இருக்கிறவர்களால் தான் அனைத்தையும் சரியாக முடிக்க முடியும். ஒரு பள்ளியில் நமக்கு அட்மிஷன் வேண்டு மென்றால் அந்த பள்ளியின் முதல்வர் நமக்கு தெரிந்தவராக இருந்தால் எளிதாக முடியும். அதேப்போல எல்லாவற்றையும் இயேசு முடிக்கிறார் என்றால் அவர் யாராக இருக்க முடியும். அவருக்கு அதிகாரம் இருந்தால் தானே இதையெல்லாம் செய்து முடிக்க முடியும். ஆம், இயேசுவுக்கே இந்த அதிகாரம் உண்டு.**

**ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும் படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். பிலிப்பியர் 2:9-11**

இந்த வசனத்தில் நாம் பார்க்கிறபடி எல்லா அதிகாரமும் இயேசுவுக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசு என்னும் நாமத்திற்கே கொடுக்கப் பட்டிருக்கிறது. **இயேசுவின் நாமம் எல்லா அதிகாரத்திற்கும் மேல் அதிகாரம் உடைய நாமம்.** எல்லா நாமங்களுக்கும் மேலான நாமம் இயேசுகிறிஸ்துவுக்கு கொடுக்கப்பட்டது. இயேசுவின் நாமத்திற்கு முழங்கால்கள் அனைத்தும் முடங்கும். **உலகத்தில் உள்ள சகல மனிதர்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதற்காக கொடுக்கப்பட்ட ஒரே நாமம் இயேசுவின் நாமம்**

**ஒன்றே.** அந்த நாமத்தை நாம் உச்சரிக்கும்பொழுது **யாக்கோபு 2:19-ல்** கூறுகிறபடி பிசாசுகளும், பேய்களும் அவனுடைய ஆதிக்கங்களும் நடுங்குகிறது. இன்றைக்கு அநேகருக்கு இரவில் தூக்கம் வருவதில்லை, யாரோ என் பின்னால் நடந்து வருகின்ற மாதிரி உள்ளது என புலம்புகின்றனர். பேய்கள் உங்களை துரத்துகிறதா? **இயேசுவின் நாமத்தை உச்சரித்துப் பாருங்கள். இயேசுவின் நாமத்தில் பிசாசுகள் பயந்து ஓடிவிடும். உலகப்பிரகாரமாக இருக்கிற எல்லா வல்லமைகளைக் காட்டிலும் இயேசுவின் நாமம் ஒன்றே உயர்ந்திருக்கிறது.**

தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனுஷன் தேவாலயத்தின் வாசலிலே அனுதினமும் பிச்சைக்கேட்டுக்கொண்டிருந்தான். அவனைப் பார்த்து, அப்போஸ்தலன் பேதுரு கூறியது, **"வெள்ளியும், பொன்னும் என்னிடத்தில் இல்லை, இயேசுவின் நாமத்தில் நீ எழுந்து நட."** என்றான். உடனே அவன் எழுந்து நடந்தான். **அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான், நடந்து, குதித்து, தேவனைத் துதித்துக்கொண்டு, அவர்களுடனேகூடத் தேவாலயத்திற்குள் பிரவேசித்தான். (அப்போஸ்.3:8)** எவ்வளவு ஆச்சரியமான காரியம் பேதுரு மூலமாக நடைபெறுகிறது. ஆம்! இயேசுவின் நாமம் சோர்ந்து போய், வியாதியாக இருக்கிற மனுஷர்களுக்கு மிகப் பெரிய அருமருந்தாக அமைகிறது. இதை கேட்கிற நமக்கும் ஒரு உத்வேகத்தை உண்டாக்குகிறது. **பேதுரு இயேசுவின் நாமத்தில் எழுந்து நட என்று சொன்னவுடன் முடவன் எழுந்து நடந்தான். ஏனென்றால் இயேசுவின் நாமத்தை தவிர வேறு ஒரு நாமம் நமக்கு கொடுக்கப்படவில்லை.** அவருடைய நாமத்தினால் பாவம், சாபம், வியாதியிலிருந்து விடுதலை உண்டாகிறது. சுகவீனமாக இருக்கின்றீர்களா? இயேசுவின் நாமத்தை உச்சரித்து ஜெபியுங்கள். அற்புதத்தை நிச்சயம் பெற்றுக் கொள்வீர்கள்.

நம்மேல் பிசாசுக்கு அதிகாரம் இல்லாதபடி பிசாசின் அதிகாரத்திலிருந்து இயேசுவின் நாமம் ஒன்றே நம்மை விடுதலையாக்குகிறது. பிசாசின் கிரியைகள் உங்களை மேற்கொள்ள நினைக்கும் பொழுது பயப்படாதீர்கள். இயேசு சிலுவையில் இவைகள் எல்லாவற்றின் மேலும் வெற்றி சிறந்தார். இந்த பிசாசின் அதிகாரத்தினிமித்தம் நம்முடைய சுகத்தை, ஆசீர்வாதத்தை, சமாதானத்தை இழந்து போகிறோம். சோர்ந்து போகாதீர்கள். சகலத்தையும் சுதந்தரிக்கும்படி உங்களுக்கு உதவி செய்வார். பிசாசினால் மாத்திரமல்ல, மனிதராலும் இத்தகைய போராட்டங்கள் நமக்கு உண்டாகிறது. அவைகளையும் இயேசுவின் நாமத்தினால் ஜெயிக்க முடியும்.

**கடைசியாக இயேசுவின் நாமத்தினால் நம் மூலமாக பலர் நன்மையடைவார்கள். இயேசுவின் நாமத்தினால் நாம் பல காரியங்களை செய்ய முடியும். இயேசுவின் நாமத்தினால் பல காரியங்களுக்கு நாம் முற்றுப்புள்ளி வைக்க முடியும். இயேசுவின் நாமத்தினால் பல கட்டுகளுக்கு நாம் முற்றுப்புள்ளி வைக்க முடியும். அதே நேரத்தில் பலரை கட்டவிழ்க்கவும் முடியும்.** ஒருவேளை உங்களால் சில காரியங்களை முடிக்க முடியவில்லையே என கலங்காதீர்கள், சகலத்தையும் முடித்த இயேசுகிறிஸ்துவின் நாமத்தை நினையுங்கள். உங்கள் காரியங்கள் ஜெயமாக முடியும்.

**நிகழ்காலத்தில் நீங்கள் முடிக்க வேண்டியதை முடிக்க ஒரு நாமம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது இயேசுவின் நாமம் மட்டுமே! பிலிப்பியர் நிருபம் முழுவதையும் வாசித்து பாருங்கள். இந்த பிலிப்பியர் நிருபத்தை பவுல் சிறையிலிருந்து எழுதினார். அதில் சந்தோஷத்தைக் குறித்து எழுதியுள்ளார். இதே போல உங்கள் வாழ்க்கை ஒரு சிறையாக தெரியலாம். இதுவும் முடிவுக்கு வரும். நாம் நித்திய வீட்டிற்கு செல்வோம். இயேசுவின் நாமம் உங்கள் கொம்பை உயர்த்தும். இயேசுவின் நாமம் ஆக்கினை தீர்ப்பிற்கு ஒரு முடிவை உண்டாக்கும்.**

## V. நாம் என்ன செய்ய வேண்டும்?

இவ்வளவு காரியங்களையும் கர்த்தர் நம்முடைய வாழ்க்கையில் முடிக்க வேண்டுமானால் நாம் என்ன செய்ய வேண்டும். நம்முடைய தேவன் சர்வ வல்லவராக இருந்தாலும் அவர் மனிதனிடம்

மிகவும் மென்மையாகவே நடந்துக்கொள்கிறார். மனிதர்களை அவர் நடத்துகிற விதமே அருமையானது. உங்களுக்காக அவர் காத்திருக்கிறார்.

ஆண்டவரோடு அதிக நேரத்தை செலவழிக்க, வேதம் வாசிக்க நீங்கள் நினைக்கலாம். ஆனால் ஏதோ ஒரு தொந்தரவு வந்து உங்களை தடை செய்துக் கொண்டு இருக்கிறதா? கலங்கவேண்டாம். பெதஸ்தா குளத்தருகில் நடந்த காரியங்களை நான் உங்களுக்கு கூறுகிறேன். 38 வருடங்களாக வியாதி கொண்டிருந்த ஒரு மனுஷனைத் தேடி இயேசு செல்கிறார். அப்பொழுது அவன் கூறின காரியம், குளத்தில் இறக்கி விட, எனக்கு உதவி செய்ய யாருமில்லை என்று கூறி அந்த நேரத்தை அவன் பயன்படுத்திக்கொள்கிறான். இயேசு அவனை நோக்கி உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட என சொல்லுகிறார், **உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி, தன் படுக்கையை எடுத்துக் கொண்டு, நடந்து போனான். (யோவான் 5:9)**

**கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள், அவர் சமீபமா யிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். ஏசா.55:6** உங்களைப்பார்த்து தேவன் சொல்கிறார். **"நான் உன்னை தேடி வருகிறேன்"** என்கிறார். அவர் கண்கள் நம்மை கண்டவுடனே நாம் நம்மையே அவரிடம் ஒப்புக்கொடுக்க வேண்டும். தேவன் உங்கள் ஒவ்வொருவரையும் விசேஷித்த விதத்தில் தனிப்பட்ட முறையில தேடி வந்திருக்கிறார். கர்த்தாவே **"என்னைத் தேடி நீங்கள் வந்திருக்கிறீர்கள், உம்மைப் பற்றி கொள்கிறேன்"** என்று சொல்லுங்கள். அந்த நேரமே உங்களை பாவம் என்னும் படுக்கையிலிருந்து, வியாதி என்னும் படுக்கையிலிருந்து எழுந்து நடக்க உதவி செய்வார்.

தேவன் ஒருவரே அனைத்தையும் முடிக்க வல்லவர். சிலுவையில் சகலத்தையும் முடித்தவர் உங்களோடு இருந்து உங்களை வழிநடத்துவார். சிலுவையின் இரத்தம் உங்களுக்கு எதிராக இருக்கிற அதிகாரங்களை திட்டங்களை முடித்துப்போட்டது. இயேசுவின் இரகசிய வருகைக்கு நேராக ஓடிக் கொண்டிருங்கள். உலகப்பிரகாரமாக இருக்கிற எல்லா பாடுகளுக்கும் ஒரு முற்றுப்புள்ளியை ஏற்படுத்தும். இன்றைக்கு இருக்கிற மனிதர்கள் நாளை இருப்பது இல்லை. பாவி, துன்மார்க்கன் ஒரு முடிவுக்கு வருவான். அவன் பெருக முடியாது. துன்மார்க்கரை நினைத்து மன அழுத்தத்திற்கு உள்ளாகாதீர்கள். நீதிமான் களுக்குரிய பலனை உங்களுக்கு தருவார். அவரை நம்பும்பொழுது அவர் உங்களுக்காக சகலத்தையும் முடித்துக் கொடுப்பார்.


அன்பரின் ஆறுதல் தொலைக்காட்சி நிகழ்ச்சி நேரங்கள்

தமிழில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்
NAMBIKKAI TELEVISION
வெள்ளி, சனி, ஞாயிறு
8:30PM to 9:00PM

தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்
ARADHANA TV
வியாழன், வெள்ளி
7:00PM to 7:30PM

We Are Hiring!!
ACCOUNTANT
(B.Com. / M.Com. Graduates)
Skills Required : Tally ERP 9
Male / Female || Christians Preferred
ministryofjesushr@gmail.com







01 நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன். (ரோமர் 6:22)

02 ... என்னை விடுதலையாக்கும்படிக்குக் கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பினாரென்று நான் இப்பொழுது மெய்யாய் அறிந்திருக்கிறேன் என்றான். (அப்போஸ்.12:11)

03 தேவன் தனிமையானவர்களுக்கு வீடுவாசல் ஏற்படுத்தி, கட்டுண்டவர்களை விடுதலையாக்கு கிறார். (சங்.68:6)

04 நீர் பரலோகத்திலிருந்து கேட்டு, அவர்களை உம்முடைய இரக்கங்களின்படியே அநேகந்தரம் விடுதலையாக்கிவிட்டீர். (நெகே.9:28)

05 ... விடுதலை பண்ணுங்கள், அப்பொழுது நீங்களும் விடுதலை பண்ணப்படுவீர்கள். (லூக்.6:37)

06 உங்கள் தேவனாகிய கர்த்தருக்கே பயந்து நடப்பீர்களாக; அப்பொழுது அவர் உங்கள் எல்லாச் சத்துருக்களின் கைக்கும் உங்களைத் தப்புவிப்பார்.... (2இராஜா.17:39)

07 சிறைப்பட்டுப்போனவன் தீவிரமாய் விடுதலையாவான். (ஏசாயா 51:14)

08 ...கட்டுண்டவர்களைக் கர்த்தர் விடுதலையாக்குகிறார். (சங்.146:7)

09 உங்களுக்காக உங்கள் சத்துருக்களோடே யுத்தம்பண்ணவும் உங்களை இரட்சிக்கவும் உங்களோடேகூடப் போகிறவர் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல்லவேண்டும். (உபா.20:4)

10 குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள். (யோவான் 8:36)

11 சிறைப்பட்டுப்போன என்னுடையவர்களைக் கிரயமில்லாமலும் பரிதானமில்லாமலும் விடுதலையாக்குவான் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (ஏசா.45:13)

12 நம்முடைய சத்துருக்களின் கையிலிருந்து நம்மை விடுதலை பண்ணினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது. (சங்.136:24)

13 பராக்கிரமனால் சிறைப்படுத்தப்பட்டவர்களும் விடுவிக்கப்படுவார்கள்; (ஏசா.49:25)

14 சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும். (யோவான் 8:32)

15 கர்த்தர் தம்முடைய ஜனத்தின் சிறையிருப்பைத் திருப்பும்போது, யாக்கோபுக்குக் களிப்பும், இஸ்ரவேலுக்கு மகிழ்ச்சியும் உண்டாகும். (சங்.14:7)

16 என் மீறுதல்கள் எல்லாவற்றிலுமிருந்து என்னை விடுதலையாக்கும், மூடனுடைய நிந்தனைக்கு என்னை ஒப்புக்கொடாதேயும். (சங்.39:8)

17 ...ஸ்திரீயே, உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய். (லூக்கா 13:12)

18 ....உன்னை விடுதலையாக்கி, சாத்தானுடைய அதிகாரத்தை விட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும் பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார். (அப்போஸ்.26:17–18)

19 ...பெலவந்தனால் கொள்ளையிடப்பட்டதும் விடுதலையாக்கப்படும். (ஏசா.49:25)

20 ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார். (எபி.2:15)

21 கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே. (ரோமர் 8:2)

22 அவர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும், ....பாலும் தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவும் இறங்கினேன். (யாத்தி.3:8)

23 ...விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப் படுகிறான். (அப்போஸ்.13:39)

24 ....நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதனின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். (ரோமர் 7:6)

25 பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள். (ரோமர் 6:18)

26 உங்கள் சத்துருக்களின் கைகளினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, உயிரோடிருக்கும் நாளெல்லாம் ...எனக்கு ஊழியஞ்செய்யக் கட்டளையிடுவேன். (லூக்.1:71)


27 கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார், ...நொறுங்குண்டவர்களை விடுதலை யாக்கவும்... (லூக்.4:18)

28 அதற்கு அவன்: இதோ, நாலுபேர் விடுதலையாய் அக்கினியின் நடுவிலே உலாவுகிறதைக் காண்கிறேன்; அவர்களுக்கு ஒரு சேதமுமில்லை.... (தானி.3:25)

29 சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும்... (ரோமர் 8:20)

30 கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு. (2கொரி.3:17)

31 இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். (கொலோ.1:13)




# கர்த்தரை துதிப்போம்!

அன்று பெற்றோரின் அன்பின்றி ஏங்கின நிலையிலிருந்து.....
இன்று ஆயிரக்கணக்கான ஏழை பிள்ளைகளுக்கு தந்தையாக...





அன்று கொடிய நோயினால் துன்புற்ற சூழ்நிலையிலிருந்து...
இன்று பல நோயாளிகளுக்காக ஜெபிக்கிற ஊழியராக...

அன்று தற்கொலையை நோக்கி ஓடின மனநிலையிலிருந்து...
இன்று அநேகருடைய வாழ்விற்கு தேவையான ஆலோசனைகளை தருபவராக...

அன்று உறவுகளை இழந்த நிலையில்...
இன்று உலகமெங்கும் அநேகருக்கு சொந்த சகோதரனாய், தகப்பனாய்...





# HAPPY | 72nd | BIRTH DAY

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்;
அவர் ...தம்முடைய வாக்கினால் சொன்னதை,
தம்முடைய கரத்தினால் நிறைவேற்றினார்.
(2நாளா. 6:4)

## தொடர்ந்து ஜெபிப்போம்!

உங்களுக்காக எப்பொழுதும் ஜெபித்துக்கொண்டிருக்கிற உங்கள் சகோதரர் Dr. ஆனந்த ஸ்திரா அவர்களின் நல்ல உடல் நலத்திற்காக...

உங்கள் சகோதரரை கர்த்தர் ஊழியத்தில் இன்னும் வல்லமையாக எடுத்து பயன்படுத்த...

Dr. ஆனந்த ஸ்திரா அவர்களின் குடும்பத்தினருடைய நல்ல சுகத்திற்காக...

உங்கள் சகோதரர் அதிகமாக நேசிக்கிற அன்பின் ஊழிய பங்காளர்களுக்காக...

உங்கள் சகோதரருக்கு எல்லாவற்றிலும் ஒத்தாசையாக இருக்கிற அன்புள்ளம் கொண்ட அனைவருக்காக...

# துதி அறிக்கை

## இரட்சிப்பைப் பெற்றேன்!



நான் கிறிஸ்துவை அறியாத குடும்பத்தில் பிறந்து வளர்ந்தேன். 2010-ம் ஆண்டு மதுரை CSI மைதானத்தில் நான்கு நாள் நற்செய்தி பெருவிழா கூட்டம் நடைபெற்றது. நான் கடைசி நாளில் கலந்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது. ஜெப நேரத்தில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் உங்களுக்கு இரட்சிப்பு வேண்டுமா? ஆசீர்வாதம் வேண்டுமா? குழந்தை பாக்கியம் வேண்டுமா? என கூட்டத்தினரைப் பார்த்து கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அந்த நேரத்தில் எனக்கு குழந்தை இல்லை. இருப்பினும் நான் ஆண்டவரிடம் ஆண்டவரே எனக்கு முதலில் இரட்சிப்புதான் வேண்டும் என ஜெபித்தேன். அடுத்த நிமிடமே ஐயா அவர்கள் தீர்க்க தரிசனமாக என்னை பெயர் சொல்லி அழைத் தார்கள். மாலதி, நீங்கள் மனதிற்குள் ஜெபிக்கிற படியே கர்த்தர் உங்களை இந்த நாளில் இரட்சிக் கிறார் என சொன்னார்கள். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அன்று தான் ஐயா அவர்களை முதன்முறையாக நான் பார்க்கிறேன். என் பெயர் இவருக்கு எப்படி தெரியும் என்ற ஆச்சரியத்துடன் கூட்டம் முடிந்து வீட்டிற்கு சென்றேன்.

என் வாழ்வில் பலமாற்றங்கள் ஏற்பட்டது. தேவ கிருபையால் இரட்சிக்கப்பட்டு வாழ ஆரம்பித்தேன். அதன்பின் என் வாழ்வில் இருந்த அனைத்து துக்கத்தையும் கர்த்தர் மாற்றி சந்தோஷத்தால் நிரப்பினார். தற்பொழுது நானும் என் கணவரும் பணி ஓய்வுபெற்ற பிறகும் இன்னும் 5 வருடம் வேலை பார்க்கும்படி ஆண்டவர் எங்களுக்கு ஒத்தாசை செய்திருக்கிறார். இம்மட்டும் எங்களை ஆசீர்வதித்து நடத்தி வருகிற கர்த்தரை மனதார துதிக்கிறேன், ஸ்தோத்தரிக்கிறேன்.

**- திருமதி. மாலதி, மதுரை.**

## திருமண தடை நீங்கியது!



நாங்கள் அன்பரின் ஊழியத்தை அறிந்த நாள் முதல் இன்று வரை எங்கள் ஜெபத் தாலும் காணிக்கை யாலும் ஊழியத்தைத் தொடர்ந்து தாங்கி வருகிறோம். என் மகளுடைய திருமணத் திற்காக பல வருடங்கள் நாங்கள் முயற்சி செய்துக்

கொண்டிருந்தோம். ஆனால் தடையாகவே இருந்தது. மகளுடைய திருமணத்திற்காக **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் தொடர்ந்து பாரத்துடன் ஜெபித்தார்கள். கடந்த வருடத்தில் மகளுக்கு ஏற்ற வரன் கிடைத்து திருமணம் நடைபெற கர்த்தர் உதவி செய்தார். தேவனுக்கே மகிமை! எங்களை நேசித்து எங்களுக்காக எப்பொழுதும் ஜெபிக்கிற ஐயாவிற்கு எங்கள் நன்றியைத் தெரிவிக்கிறோம்.

**- திரு. செல்வராஜ், பாண்டிச்சேரி.**

## பொருத்தனை ஜெபத்தை கர்த்தர் கேட்டார்!



கடந்த ஒரு மாதமாக சரீர பெலவீனத்தினால் நான் அதிக கஷ்டப்பட்டேன். என் வீட்டில் யாரிடமும் சொல்லவில்லை. "அன்பரின் ஊழியத்தில் சாட்சி சொல்வேன் இயேசுவே என்னை குணமாக்கும்" என பொருத்தனையோடு ஜெபித்தேன். தற்பொழுது அந்த பெலவீனம் நீங்கி நல்ல சுகத்துடன் இருக்கிறேன். அற்புத சுகத்தைத் தந்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன்.

**- திருமதி. எஸ்தர், நாகர்கோவில்.**

**Tamil Whats App No.**
**+ 91 95004 87059**

## தடை நீங்கி திருமணம் நடைபெற்றது!



என் மகளுடைய திருமணம் சுமார் ஐந்து ஆண்டு காலம் தடையாகவே இருந்தது. இந் நிலையில் அன்பரின் ஊழியம் நடத்தும் அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் (நாகர்கோவில்) கலந்து கொண்டேன். தனி ஜெப வேளையில் ஐயா "இரண்டு மாதத்திற்குள் மகளுக்கு திருமணம் நடக்கும்" என்று கூறினார்கள். அதேபோல தடைகள் நீங்கியது. நல்லபடியாக திருமணம் நடைபெற கர்த்தர் கிருபை செய்தார்.

**- திருமதி. மேரி விஜயராணி, திருவட்டார்.**

## அற்புத சுகம் கிடைத்தது!

2019-ம் ஆண்டு நான் கருவுற்றிருந்தப் பொழுது 7-



வது மாதத்தில் குறை பிரசவத்தில் எனக்கு பெண் குழந்தை பிறந்தது. குழந்தையின் எடை 1.200grm இருந்தது. குழந்தையை பரிசோதித்த மருத்துவர்கள் குழந்தை

பிழைப்பது கடினம் என சொல்லி விட்டார்கள். குழந்தை ICU-ல் இருந்தது.

அந்த நேரத்தில் நான் அன்பரின் ஊழியத்திற்கு போன் மூலம் தொடர்புக் கொண்டு குழந்தைக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். ஊழியர் ஒருவர் பாரத்துடன் ஜெபித்தார்கள். கர்த்தர் இரங்கினார். குழந்தையை நல்ல சுகத்துடன் வீட்டிற்கு கொண்டு வந்தோம். குழந்தை பிழைக்க மாட்டாள் என சொன்ன மருத்துவர்களே ஆச்சரியப் படும் வகையில் கர்த்தர் என் குழந்தைக்கு அற்புத சுகம் தந்தார். அதன்பின் குழந்தையின் எடை அதிகரிக்கும்படி செய்தார். இப்பொழுது மகள் பள்ளிக்கு சென்றுக் கொண்டிருக்கிறாள். அதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். அன்பரின் ஊழியத் திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன்.

**- திருமதி. மோகன பிரியா, நாமக்கல்.**









## வங்கிக் கணக்குகளின் விபரம்

**DR. ANANDA STIRA**
**A/C NO. 10848469699**

**ANBARIN OOZHIYAM**
**A/C NO. 10848559426**

**MINISTRY OF JESUS**
**A/C NO. 10848474869**



**IFS Code: SBIN 0000930**
**State Bank of India, Cantonment, Trichy Main Branch.**

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புகொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள்.
**(10.00 AM - 6.00 PM)**

## அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை

அனுப்புவதற்கான எளிய வழிகள்

“இந்த QR code–ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது 95004 87061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் மூலமாகவும் காணிக்கை அனுப்பலாம்.”



மணியார்டர் (MO) / காசோலை (cheque) / வரைவோலை (DD)
Online Donation (Website) || Bank Account / QR Code
UPI / Google pay / Paytm / Phonepe

UPI Google Pay Paytm PhonePe

அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி - 620018.

# பிப்ரவரி மாதம் அன்பரின் ஊழியத்தின் வாயிலாக நடைபெற்ற கூட்டங்களின் அறிக்கை

## குண்டூர்










Sr.Pr. Yesu Rethinam
Vignapana ministries, Pearaicheria.





SR.PR. YESU RETHINAM
Family & Team








Pr. Abraham Raj, Last Days Ministries

# ஜாகீராபாத்



## ஜனவரி 4ம் தேதி திருச்சியில் நடைபெற்ற புத்தாண்டு தீர்க்கதரிசன ஆசீர்வாதக்கூட்டம் ஒரு சிறப்பு பார்வை



இந்த கூட்டத்திற்கு நான் வருவதற்கு தயை செய்த கர்த்தரை துதிக்கிறேன். Dr. **ஆனந்த ஸ்திரா** அவர்களின் ஆவிக்குரிய அன்பு என்னை மிகவும் கவர்ந்தது. அவர்கள் அளித்த தேவ செய்தி, உலக நாடுகளைக் குறித்து சொன்ன தீர்க்க தரிசனங்கள் அனைத்தும் எனக்கு ஆச்சரிய மாக இருந்தது. தேவனுக்கே மகிமை!



நான் அன்பரின் ஊழிய பங்காளர். ஜனவரி 4-ம் தேதி புத்தாண்டு கூட்டத்திற்கு நான் வந்தது தேவ கிருபையே. ஏனென்றால் சமீபத்தில் நான் கார் விபத்தில் சிக்கி, கை உடைந்து, சாவை கடந்து வந்திருக்கிறேன். பரிபூரண சுகத்தைக் கொடுத்து இந்த ஆண்டை காணச் செய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

திருச்சியில் நடைபெறுகிற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு நான் தவறாமல் வந்துக்கொண்டு இருக்கிறேன். ஐயா குடும்பத்தினர் தருகிற தேவ செய்தி எங்களுக்க் அதிக பிரயோஜனமாக இருக்கிறது. அதனால்



ஆவிக்குரிய பிரகாரமாக நான் நன்கு வளர்ந்து வருகிறேன். என் மகனை பள்ளியில் சேர்க்க முடியாத நிலை இருந்தது. இங்கு வந்து ஜெபித்து சென்றதினிமித்தம் கர்த்தர் மகனுக்கு அற்புதம் செய்தார். மகன் பள்ளிக்கு செல்கிறான். கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன்.



25 வருடமாக வீடு கட்ட முடியாமல் கஷ்டப்பட்டோம். திருச்சியில் நடைபெறுகிற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு நான் தொடர்ந்து வர ஆரம்பித்த நாளிலிருந்து கர்த்தர் அநேக நன்மைகளை எங்களுக்கு செய்துள்ளார். ஐயாவிடம் வீடு கட்டுவதைக் குறித்து சொன்னேன். ஐயா ஜெபித்துவிட்டு அரண்மனை மாதிரி வீடு கட்டுவாய் என சொன்னார்கள். அதே மாதிரி 6 மாதத்தில் வீட்டை கட்டி முடிக்க கர்த்தர் இரங்கினார். கர்த்தரை மனதார துதிக்கிறேன். ஐயாவிற்கு என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன்.

## திருச்சியில் அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

இடம்: அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்,
10–வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி–18

நேரம் :
காலை 9:30 மணி முதல்
மதியம் 2:00 மணி வரை

**நாள்: மார்ச் 29 சனிக்கிழமை**

தேவ செய்தியாளர்கள்

**Dr.ஆனந்த ஸ்திரா**
**மற்றும் குடும்பத்தினர்**



(கூட்ட முடிவில்
தனிஜெபம் ஏறெடுக்கப்படும்)

தொடர்புக்கு :
செல் 9488845627,
0431-2741922

பிரியமானவர்களே,

- திருச்சியில் ஒவ்வொரு மாதமும் கடைசி சனிக்கிழமையன்று நடைபெறுகிற குடும்ப ஆசீர்வாதக் கூட்டமானது அன்பரின் ஊழிய பங்காளர்களுக்காகவும், புதிதாக ஊழியத்தைக் குறித்து அறிந்தப் பிள்ளைகளுக்காகவும் நடத்தப்பட்டு வருகிறது.
- இந்த நாளில் நாங்கள் குடும்பமாக உங்களுக்கு தேவ செய்திகளை அளிக்கிறோம்.
- கூட்டத்தின் இறுதியில் உங்களை தனித்தனியாக நாங்கள் நேரில் சந்தித்து ஜெபித்து ஆலோசனை தந்துக்கொண்டிருக்கிறோம்.
- இந்த நல்ல வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.
- சகல நோயினாலும், பிசாசின் கட்டினாலும் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்காகவும் ஜெபிக்கிறோம்.
- இந்த புதிய ஆண்டிலிருந்து குடும்பமாக இந்த கூட்டத்திற்கு வாருங்கள்.
- முன்பக்கம் பலருடைய சாட்சிகளை படித்திருப்பீர்கள். அவ்வாறு உங்கள் வாழ்விலும் நீங்கள் அற்புதங்களை காண சாட்சியாக நிற்க கூட்டத்திற்கு வாருங்கள்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

# உலக செய்திகள்



மத்ஸ்யா 6000 நீர் மூழ்கி இயந்திரம், நீருக்கடியில் ஆராய்ச்சி மேற்கொள்ளும் வகையில் கோளவடிவில் டைட்டானியம் உலோகத்தால் உருவாக்கப்பட்டது. இது சுமார் 6.6 மீட்டர் நீளமும், 210 டன் எடையும் 6000 மீட்டர் ஆழத்தை அடையும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த நீர் மூழ்கி இயந்திரத்தை இயக்குவதற்காக முன்னாள் கடற்படை அலுவலர்கள், இரண்டு நியாட் ஆய்வாளர்களுக்குப் பயிற்சி அளித்து வருகின்றனர்.

2026ம் ஆண்டிற்குள் செயல்பாட்டுக்கு வர செய்வதை குறிக்கோளாக வைத்து ஆராய்ச்சியாளர்கள் மும்முரமாக பணியாற்றி வருகின்றனர். இதற்கான சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது. இந்தத் திட்டத்தின் சோதனையை கடந்த ஜனவரி 27ம் தேதி முதல் பிப்ரவரி 12ம் தேதி வரை சென்னையில் உள்ள தேசிய பெருங்கடல் தொழில் நுட்பநிறுவனம் வெற்றிகரமாக நடத்தி உள்ளது.

ஆழ்கடலில் மனிதரை அனுப்பி 15 நாட்களுக்குமேல் சோதனை நடத்தப்பட்டது என அதிகாரிகள் தெரிவித்தனர். கடலுக்கு அடியில் இருக்கும் நிக்கல், கோபால்ட், மாங்கனீசு, பூமியின் அரியதாதுக்கள் போன்ற கனிமவளங்களை கண்டு பிடிப்பதற்கும் அதன் மாதிரிகளை சேகரிப்பதற்கும் மனிதர்களை ஆழ்கடலுக்கு அனுப்புகின்றனர். இந்த திட்டம் 2026ம் ஆண்டுக்குள் நிறைவேறும் என புவி அறிவியல் அமைச்சக அதிகாரிகள் தெரிவித்தனர்.

திருப்பூர் மாவட்டம், உடுமலை அருகே அமராவதி நதிக்கரையில், குமணன் துறை, மாரக்காபாறை பகுதியில், மத்திய தொல்லியல் துறை ஆய்வாளர் தலைமையில் மேற்பரப்பு ஆய்வு மேற்கொண்டனர். இது குறித்து தொல்லியல் துறை ஆய்வாளர் கூறியவதாவது. ஆண் பொருளை எனப்படும் அமராவதி நதிக்கரையில், இரண்டாயிரம் ஆண்டு பழமையான நதிக்கரை நாகரீகம் இருந்ததும், கரை வழி நாடுகள், ராஜ, ராஜ வளநாடுகள் இருந்ததற்கான சான்றுகள், கடையேழு வள்ளல்களுக்கு பிறகு குமணன் என்ற மன்னன் ஆட்சி செய்தது உள்ளிட்ட வரலாறுகள் கல்வெட்டுக்கள், சங்ககால பாடல்கள் வாயிலாக உடுமலை வரலாற்று ஆய்வு நடுவம் சார்பில் ஆவணப்படுத்தப் பட்டுள்ளது.

# S.J.SAVES TRUST

## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை



திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற
உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும்,
...பிதாவாகிய தேவனுக்குமுன்பாக
மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது.
(யாக்கோபு 1:27)



ஜனவரி மாதம் சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டுப்பட்டி, நாட்டாமங்கலம், சேத்துகுட்டை, குறவன் காடு, காட்டூர் ஆகிய கிராமங்களில் உள்ள ஏழை தாய்மார்கள், விதவைகள் மற்றும் வயதானவர்களுக்கு புத்தாடைகள், ஊட்டச்சத்து பொருட்கள், மருந்துகள், மதிய உணவு வகைகள் (பிரியாணி, இனிப்பு, காரம்) வழங்கப்பட்டது.



வயதான ஆண்களுக்கு புது வேஷ்டி, துண்டு, ஊட்டச்சத்து பொருட்கள், மருந்துகள், மதிய உணவை Dr. ஆனந்த எஸ்திரா அவர்கள் வழங்கினார்கள்.

இந்தப் பணிக்கு உதவி செய்கிற பங்காளர்கள் ஒவ்வொருவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பார். தொடர்ந்து இந்த பணிகளுக்காக ஜெபியுங்கள். உற்சாகமாய் தாங்குங்கள்.









**CAMERA MAN / VIDEO EDITORS**
**GRAPHIC DESIGNER**

(Any UG/PG Candidates)

Skills Required :Able to work in Adobe Photoshop, Adobe Illustrator, CorelDraw, Adobe Premiere Pro & After Effects

**Male / Female, Christians Preferred**

Apply to: ministryofjesushr@gmail.com

# We Are Hiring!!

PRAYER WARRIORS
Language Known
Tamil-Malayalam
Tamil- Telugu

ministryofjesushr@gmail.com



Male / Female || Christians Preferred

**S.J. SAVES TRUST- ல் உள்ள ஏழை பிள்ளைகளுக்கு உதவி செய்ய**

**Bank A/c. Name : SJ SAVES TRUST**
**Account No. 019150310875369**
**Bank Name : Tamilnadu Mercantile Bank**
**Branch : Palakarai, Trichy.**
**IFSC Code : TMBL 0000019**
**A/c Type : Current**

**Telugu Whats App No. + 91 91770 87860**

# டெலிவரன்ஸ் திருச்சபைக்கு வருகிற மக்கள் வாழ்வில் கர்த்தர் செய்த மகத்தான செயல்கள்!

## சொந்த வீட்டை கர்த்தர் தந்தார், பெலவீனம் நீங்கியது!



நான் வீடு இல்லாமல் கஷ்டப்பட்டேன். அதற்காக **Rev.Dr.A.ஜாஷ்வா** அவர்களிடம் ஜெபிக்கும்படி சொன்னேன். பாஸ்டர் அவர்களும் வீட்டிற்காக ஜெபித்தார்கள். பல தடைகள் வந்த போதிலும் தேவ கிருபையால் அரசாங்க உதவியுடன் வீடு கட்டி முடிக்க கர்த்தர் உதவி செய்தார்.

கடந்த டிசம்பர் மாதம் சரீர பெலவீனத்தினால் அதிகம் கஷ்டப்பட்டேன். அந்த நேரத்தில் கர்த்தரை நோக்கி ஜெபித்தேன். பாஸ்டர் அவர்களும் எனக்காக ஜெபித்தார்கள். மிகுந்த பெலவீனத்துடன் இருந்த எனக்கு கர்த்தர் தாமே இரங்கி தேவையான பெலனை தந்தார். வீடு கட்டவும், பெலவீனம் நீங்கவும் உதவி செய்த கர்த்தரை துதிக்கிறேன். பாஸ்டர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன்.

- **திருமதி. எலிசபெத், திருச்சி.**

joshua@mojindia.org

# விடுதலையின் ஆசீர்வாத ஆராதனை

ஞாயிறு தோறும் காலை 9:30 மணி - 11:30 மணி

அபிஷேகம் நிறைந்த பாடல்கள், அனல் மூட்டும் தேவ செய்தி,
உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்

ஜாதி, மத, இன வேறுபாடின்றி அனைவரும் குடும்பமாக இவ்வாராதனையில் பங்கு பெற அன்புடன் அழைக்கின்றோம்.

டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப மையம்
10-வது குறுக்குத் தெரு, மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18.





மார்த்தாண்டத்தில்

# அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்

மார்ச் 1 சனிக்கிழமை

இடம் : YMCA Hall
வெட்டு வெண்ணி ஜங்சன், மார்த்தாண்டம்

நேரம் : காலை 9:30 மணி முதல் மதியம் 2:00 மணி வரை

தேவசெய்தி : Dr.ஆனந்த ஸ்திரா

கூட்டமுடிவில் தனி ஜெபம் ஏறெடுக்கப்படும்

தொடர்புக்கு : 94888 45627 & 82203 17472

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2025-2027 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

மார்ச் 08
(சனிக்கிழமை)

காலை 9:30 முதல்
மதியம் 2:00 வரை

சென்னையில்

# அற்புத குடும்ப ஆசீர்வாத கூட்டம்



தேவ செய்தி

**Dr.ஆனந்த ஸ்திரா & Mrs.மார்கிரேட் ஸ்திரா**

BKN Skidmore Hall A/C, ரித்தர்டன் ரோடு, வெப்பேரி, சென்னை.

தொடர்புக்கு : 94888 45627



சென்னையில்

# இரண்டாம் ஆண்டு மகளிர் தின பெண்கள் சிறப்பு ஆராதனை

மார்ச் 08
(2 -வது சனிக்கிழமை)

காலை 9:00 முதல்
மதியம் 2:00 வரை

தேவ செய்தி **Dr.ஜேன் ஜாஷ்வா**

அட்வென்ட் கிறிஸ்தவ முதல் திருச்சபை, கிண்டி, சென்னை.

தொடர்புக்கு : 9488845627

மார்ச்
22
23

TAMIL LIVE

# JOY UNLIMITED

LIVE STREAM

DR. JANE JOSHUA
YOUTUBE CHANNEL

மாலை 7:00 மணி

சனி மற்றும் ஞாயிறு

Rev. Dr. A. Joshua &
Dr. Jane Joshua




Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,